# இந்தியன் சினிமா அட்ராக்ஷன் ஃபண்ட்(Indian Cinema Attraction Fund (ICAF) வழிமுறைகள்

## இந்த திட்டத்தைப் பற்றி

/ ஃப்லிம் விக்டோரியாவின் (Film Victoria's) *இந்தியன் சினிமா அட்ராக்ஷன் ஃபண்ட்(ICAF)* இந்தியாவிலிருந்து ஃபுட்லூஸ் திரைப்படங்களுக்கு நிதி வழங்குகிறது அது விக்டோரியாவில் தயாரிப்பு,அல்லது தயாரிப்பு மற்றும் பிந்தைய-தயாரிப்பு இரண்டிற்கும் நிதி வழங்குகிறது

## நாங்கள் என்ன எதிர்பார்க்கிறோம்?

/ திரைப்படங்கள்:

- விக்டோரியாவில்தயாரிப்பு, அல்லது தயாரிப்பு மற்றும்பிந்தைய-தயாரிப்பு, இரண்டையும் மேற்கொள்ள
- இந்தியாவில் உள்ள இந்திய சினிமா ரசிகர்களுக்கு மெல்போர்ன் (Melbourne) மற்றும் விக்டோரியாவை காட்சிப்படுத்துங்கள்
- இந்திய புலம்பெயர் சமூகங்களின் உறுப்பினர்களை மையமாகக் கொண்டு விக்டோரியன் திரைத்தொழில் பயிற்சி செய்பவர்களுக்கான திறன் மேம்பாட்டு வாய்ப்புகளை அதிகரித்தல்
- விக்டோரியன்களை வேலைக்கு அமர்த்துதல் மற்றும் விக்டோரியன் வணிகங்களை ஈடுபடுத்துதல்

## யார் தகுதி பெற்றவர்கள்?

/ விண்ணப்பதாரர்கள்

- பின்வருமாறு இருக்க வேண்டும்:
  - இந்திய தயாரிப்பு நிறுவனம் அல்லது ஸ்டுடியோ, அல்லது
  - இந்திய நிறுவனம் சொந்தமாகக் கொண்டுள்ளஆஸ்திரேலிய சிறப்பு நோக்கம் கொண்ட வாகனம் (Special Purpose Vehicle) (SPV)
- குறைந்தது 10 முழுநீள திரைப்படங்கள் தயாரித்து இருக்க வேண்டும், ஒவ்வொன்றும் இந்தியாவில் 1,000 திரைகளில் வெளியிடப்பட்டிருக்க வேண்டும்

(இதில் குறைந்தது ஒன்றாவது கடந்த ஐந்து வருடங்களில் வெளியிடப்பட்டிருக்க வேண்டும்)

- திட்டத்தை தயாரிக்கும் உரிமைகளைப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் திட்ட உரிமையை (project ownership) உறுதி செய்ய வேண்டும் .

## *எந்த திட்டங்கள் தகுதியானவை?*

/ தகுதி பெற திட்டங்கள் கண்டிப்பாக:

- ஒரு முழு நீள திரைப்படமாக இருக்க வேண்டும்
- ஏற்றுக்கொள்ளப்பட்ட தயாரிப்பு அம்சங்களுக்காக குறைந்தது $700,000 விக்டோரியாவில் செலவிடப்படும் என்பதை உறுதி செய்ய வேண்டும் ('நிதி உதவி உங்களுக்கு எதற்கு கிடைக்கும்' என்பதை கீழ் உள்ள பிரிவில் பார்க்கவும்)
- இந்த திட்டம் குறைந்தது 1000 இந்திய திரையரங்குகளில்வெளியிடப்படும்என்பதற்கான ஆதாரம் (கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தம் மூலம்) இருக்க வேண்டும்.
- முழுவதும் நிதியளிக்கப்பட்டு, இந்த நிதித்திட்டத்தில்ICAF நிதியுதவியின் பங்கு இல்லாமலிருக்க வேண்டும்
- விக்டோரியன் தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஆஸ்திரேலிய திரைத் தொழில் பயிற்சியாளர்களுக்கான குறைந்தபட்ச ஆஸ்திரேலியா தொழில் தரும் சம்பள விகிதங்களை உள்ளடக்கிய ஒரு பட்ஜெட்டை வைத்திருக்க வேண்டும்.
- விக்டோரியன் குடியிருப்பாளர்களான சில திரைத் தொழில் பயிற்சி செய்பவர்களை ஈடுபடுத்த வேண்டும்
- முக்கிய இந்திய ஒளிபரப்பாளர்கள் அல்லது எஸ்.வி.ஓ.டி(SVOD) வழங்குநர்களுக்காக தயாரிக்கப்பட்ட திரைப்படங்கள் அல்லது புனைகதைத் தொடர்களுக்கான விண்ணப்பங்களை ஃப்லிம் விக்டோரியா ஒவ்வொன்றாக அதனதன் அடிப்படையில் பரிசீலிக்கலாம்.
- முறையான முன்-தயாரிப்பு துவங்குவதற்கு முன்னரே விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெற்றிருக்கப்பட வேண்டும்.

## *எது தகுதியற்றது?*

/ ICAF நிதியுதவிக்கு பின் வருவனவை தகுதியானதல்ல:

- பொழுதுபோக்கு (Infotainment), உண்மை (reality) மற்றும் பத்திரிகை நிகழ்ச்சிகள்
- பல்சுவை நிகழ்ச்சிகள் மற்றும் சிறு பொழுது போக்குகள்

- விளையாட்டு மற்றும் தற்போதைய நிகழ்வு நிகழ்ச்சிகள்
- தொலைக்காட்சி விளம்பரங்கள்
- குறும்படங்கள் (<60 நிமிடங்கள்)
- சமூக தொலைக்காட்சி
- மாணவர் படங்கள்
- ஃப்லிம் விக்டோரியாவிலிருந்து ஏற்கனவே ஏதாவது நிதி உதவி பெற்ற திட்டங்கள்

## *எதற்காக நீங்கள் நிதி உதவி பெறலாம்?*

/ ICAF நிதியுதவியானது, ஒரு திட்டத்தில் செலவான தகுதி பெற்ற விக்டோரியன் செலவில் ஒரு சதவீதமாக கணக்கிடப்படுகிறது அதில் கீழ்க்கண்டவை அடங்கும்:

- இந்த திட்டம் தொடர்பாக விக்டோரியன் திரை பயிற்சி செய்பவர்கள், குடியிருப்பாளர்கள் அல்லது விக்டோரியாவில் வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்காக நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்ட தொகைகள்
- திட்டத்தில் ஈடுபட்டுள்ள விக்டோரியன் குடியிருப்பாளர்களுக்கு செலுத்தப்படும் அல்லது ஏற்படும் சம்பளம் மற்றும் செலவுகள்
- விக்டோரியா குடிமக்கள் அல்லாத ஆனால் விக்டோரியாவில் உள்ள தயாரிப்பாளருக்கு இந்த திட்டம் தொடர்பாக சேவை வழங்கும் திரைத்தொழில் பயிற்சி செய்பவர்களுக்கு, விக்டோரியாவில் கொடுக்கப்பட்ட அல்லது செலவழிக்கப்பட்ட தங்குமிடம் மற்றும் போக்குவரத்து செலவு.
- ஆஸ்திரேலியாவில் தயாரிக்கப்படும் திட்டம் சம்பந்தமாக விக்டோரியன் பயண முகவர் மூலம் வாங்கப்பட்ட அனைத்து விமானப்பயணங்களுக்கும்.

/ தகுதி பெற்ற விக்டோரியன் செலவினம் குறித்த முழு விளக்கம் இங்கு கிடைக்கும்.

## *எவ்வளவு தொகைக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம்?*

/ தகுதி பெற்ற விக்டோரியன் செலவினங்களுக்கானதிட்டத்தில் 25% வரை நிதியுதவி

- புரொடக்ஷன் இன்செண்டிவ் அட்ராக்ஷன் ஃபண்ட் (Production Incentive Attraction Fund (PIAF) குழுவின் விருப்பத்திற்கிணங்க விக்டோரியாவுக்கு குறிப்பிடத்தக்க மதிப்பைக் கொடுக்கும் திட்டங்கள் 25% க்கும் அதிகமானவற்றைப் பெற தகுதியுடையதாக இருக்கலாம்.

/ விண்ணப்பதாரர்கள் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன் பிலிம் விக்டோரியாவுடன் தங்கள் நிதி கோரிக்கைகளை விவாதிக்க வேண்டும்.

## இந்த திட்டம் குறித்து நீங்கள் யாருடன் பேசலாம்?

- ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் முன், உங்கள் தகுதி குறித்து ஃப்லிம் விக்டோரியாவுடன் நீங்கள் விவாதிக்க வேண்டும்
- பின்வருவனவற்றை ஈமெயில் மூலம் ICAF@film.vic.gov.au க்கு அனுப்பவும் அல்லது விவாதிக்க +61 3 9660 3215 ஐ அழைக்கவும்
- இந்த திட்டம் முழுமையாக நிதியளிக்கப்பட்டிருப்பது மற்றும் இந்தியாவில் குறைந்தது 1,000 சினிமா திரைகளில் விநியோகிக்கப்படுவதை உறுதிப்படுத்தியது உட்பட உங்கள் முன்மொழியப்பட்ட திட்டத்தைப் பற்றிய விவரங்கள்.
- இந்தியாவில் குறைந்தது 1,000 சினிமா திரைகளில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள திரைப்படங்களில் தயாரிப்பாளர், நிர்வாக தயாரிப்பாளர் அல்லது தயாரிப்பு நிறுவனம் என உங்களது முந்தைய 10 நன்மதிப்பு தகுதிகளைப் பட்டியலிடுங்கள்.

# விவரங்கள்

## *நீங்கள் விண்ணப்பித்தவுடன் என்ன நடக்கும்?*

- உங்கள் விண்ணப்பம் PIAF கமிட்டியால் மதிப்பீடு செய்யப்படும் அவர்கள் கீழ்க்கண்ட ***மதிப்பீடு அளவீடுகள்*** உட்பட பல அம்சங்களை கருத்தில் கொள்வார்கள்:
  - தயாரிப்புமற்றும் பிந்தைய தயாரிப்புஆகியவற்றின் தகுதி பெறும் விக்டோரியன் செலவினத்தின் முன்மொழியப்படும் நிலை
  - திட்டத்திற்கு உறுதியளிக்கும் இந்திய திரையரங்கு விநியோகத்தின் நிலை
  - இந்திய புலம்பெயர் சமூகங்களின் உறுப்பினர்களை மையமாகக் கொண்டுதிட்டத்தில் விக்டோரியன் திரை தொழில் பயிற்சி செய்பவர்களுக்கு வழங்கக்கூடிய திறன் மேம்பாட்டு வாய்ப்புகளின் எண்ணிக்கைவேலைவாய்ப்புகள் மற்றும் இணைப்புகள்
  - விண்ணப்பதாரரின் தட பதிவு(track record)
  - பிலிம் விக்டோரியாவின் மதிப்புகள் மற்றும் நற்பெயருடன் இந்த திட்டம் எவ்வாறு இணைகிறது. வயது, இனம், தேசியம், இனம், பாலினம், பாலியல் முன்னுரிமை, மதம் அல்லது உடல் அல்லது மன ஊனம் ஆகியவற்றின் அடிப்படையில் பாதிப்பு ஏற்படுத்தும் அம்சங்களை பிலிம் விக்டோரியா ஆதரிக்காது.
  - திட்டத்தில் உள்ள நிதி திட்டத்தினநம்பகத்தன்மை
  - திட்டத்தின் பிற அம்சங்கள் மற்றும் விக்டோரியாவில் அதன் தயாரிப்பு ஆகியவை குறித்து ICAF திட்டத்தின் நோக்கங்களுடன் தொடர்புடையதாக PIAF குழு கருதும் விஷயங்கள்.
- கீழ்க்கண்டவை கொண்ட விண்ணப்பங்களுக்கு கமிட்டி முன்னுரிமை தரும்:
  - விக்டோரியன் திரை தொழில் பயிற்சி செய்பவர்களுக்கு கிடைக்கும் வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை
  - விக்டோரியாவுக்கு கிடைக்கும் சுற்றுலா பலன்கள்
- நிதியுதவி என்பது போட்டித்தன்மை வாய்ந்தது மற்றும் ICAF நிதி இருப்பு மற்றும் விக்டோரியாவிற்கு திட்டத்தினால் கிடைக்கும் மதிப்பு ஆகியவற்றை கணக்கில் எடுத்துக்கொண்டு முடிவுகள் எடுக்கப்படும்.

## *முடிவு எடுக்க எவ்வளவு காலம் ஆகும்?*

- PIAF கமிட்டி பொதுவாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து நான்கிலிருந்து ஆறு வாரங்களுக்குள் மதிப்பீடு செய்யும்.
- உங்களின் தகுதி வாய்ந்த திட்டத்திற்கு நேரம் முக்கியமானது, எனவே நீங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னால் ICAF@film.vic.gov.au க்கு ஈமெயில் செய்து விவாதிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.
- உங்களுக்கு நிதியுதவி கிடைத்தால் என்ன நடக்கும்?
- நிதி ஒரு மானியமாகவழங்கப்படும்
- வெற்றிகரமான விண்ணப்பதாரர்கள் குறைந்தது ஒருலைன் பிளேஸ்மெண்டுக்கு மேலும் பல லைன் அட்டாச்மெண்ட்களுக்கு கீழும்பயிற்சியளிக்க எதிர்பார்க்கப்படுகிறார்கள் (அனைத்தும் பிலிம் விக்டோரியாவால் செலுத்தப்படும்)
- வெற்றிகரமான விண்ணப்பதாரர்கள் ஒரு ஆஸ்திரேலிய நிறுவனத்தை நிறுவி அல்லது ஒரு SPVயை நிறுவி அது பிலிம் விக்டோரியாவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள எதிர்பார்க்கப்படுகிறார்கள்
- தகுதிவாய்ந்த விண்ணப்பதாரரின் சார்பாக தயாரிப்பு சேவைகளை வழங்கும் ஆஸ்திரேலிய நிறுவனங்கள் தயாரிப்பு சேவைகள் ஒப்பந்தத்தின் நகலை வழங்க வேண்டும் (பொருந்தினால்)
- ICAF மானியத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பொதுவாக பின்வருமாறு:
  - மானியம் பெற இந்த திட்டம் ஒப்புக் கொள்ளப்பட்ட தகுதி பெற்ற விக்டோரியன் செலவினத்தை அடைந்திருக்க வேண்டும்
  - திட்டத்தில் பிலிம் விக்டோரியாவுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும்.
  - விக்டோரியாவில் திட்டத்தின் தயாரிப்பு நடவடிக்கைகளை விளம்பரப்படுத்த விண்ணப்பதாரர் விக்டோரியா மற்றும் விக்டோரியன் அரசாங்கத்திற்கு விளம்பரம் மற்றும் ஊடக வாய்ப்புகளுடன் உதவ வேண்டும்
  - தயாரிப்பு முடிந்ததும் பிலிம் விக்டோரியாவிற்கு வழங்கப்பட வேண்டிய விவரங்கள் (நிலையான விநியோகங்களின் முழு பட்டியலுக்குஇங்கே கிளிக் செய்க).
- ICAF மானியங்கள் பொதுவாக மூன்று தவணைகளில் வழங்கப்படும்.
  - 10% திட்டத்தில் பிலிம் விக்டோரியாவின் இறுதி கிரெடிட் ஒப்புதலின் போது (மாஸ்டரிங்குக்கு முன்னால்) மற்றும் புராஜக்ட்டின் ர.்ப் கட் ஒப்புதலின்போது
  - புகைப்பட ஸ்டில்கள், பத்திரிகையாளர் கிட், இபிகே, நடிகர்கள் மற்றும் பணியாளர்கள் பட்டியல் மற்றும் ட்ரெய்லர் ஆகியவை வழங்கப்படும்போது 10% .

- தணிக்கை செய்யப்பட்ட செலவு அறிக்கை (ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து அல்லது சிபிஏ ஆஸ்திரேலியாவில் உறுப்பினராக உள்ள ஒரு சுயாதீன தகுதி வாய்ந்த ஆடிட்டரால் பூர்த்தி செய்யப்பட்டது), பணம் அனுப்பும் கேள்வித்தாள், செலவு அறிக்கைகள், அட்டவணைகள் மற்றும் திட்டத்தின் நகல் உட்பட அனைத்து விநியோகங்களையும் பெறும்போது 80%

/ எந்தவொரு தேவைகளும் பூர்த்தி செய்யப்படாவிட்டால், தவணைத் தொகையைத் தடுத்து நிறுத்துவதற்கான அல்லது மாற்றுவதற்கான உரிமையை பிலிம் விக்டோரியா கொண்டுள்ளது அதில் இவையும் அடங்கும்:

- ஒப்புக்கொள்ளப்பட்ட தகுதியான விக்டோரியன் செலவினத்தை அடைதல்
- விக்டோரியன் குடியிருப்பாளர்கள் அல்லது நிறுவனங்களுக்கு நிலுவைத் தொகை செலுத்தப்படவில்லையெனில்
- விநியோகம் செய்யப்பட வேண்டியதை விநியோகம் செய்தல்

/ ICAF விண்ணப்பங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மானியங்கள் வணிக ரீதியாக ரகசியமானது மற்றும் விண்ணப்பதாரர்கள் ரகசியத்தன்மையைப் பராமரிக்க வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் திட்டங்களின் விவரங்களை பிலிம் விக்டோரியா முன் அனுமதியின்றி வெளியிடாது.

## *உங்களுக்கு நிதியுதவி கிடைக்கா விட்டால் என்ன நடக்கும்?*

/ உங்கள் விண்ணப்பம் வெற்றிகரமாக இல்லாவிட்டால், உங்களுக்குத் தெரியப்படுத்த நாங்கள் உங்களைத் தொடர்புகொள்வோம்.

/ அந்த கட்டத்தில், உங்கள் விண்ணப்பத்தைப் பற்றிய பின்னூட்டத்திற்கு, நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

## *விண்ணப்பிப்பதற்கு என்ன ஆவணங்கள் வேண்டும்?*

/ விண்ணப்ப படிவத்துடன் சம்ப்பிக்க கீழ்க்கண்ட ஆவணங்கள் தேவைப்படும்:

- வேண்டுகோள் கடிதம், பின் வருவன உட்பட:
  - கோரப்படும் ஊக்கத்தொகை
  - விண்ணப்பதாரர் நிறுவனம் மற்றும் உரிமைகள் வைத்திருக்கும் நிறுவனத்தின் பின்னணி (விண்ணப்பதாரர் நிறுவனத்தின் வரவுகளின் சான்றுகள் உட்பட)
  - திடத்தின் நிதி அமைப்பு
  - இந்தியாவில் விநியோக ஏற்பாடுகள் தொடர்பான தகவல்கள், திரைகளின் எண்ணிக்கை உட்பட.

    - தயாரிப்பில் பயன்படுத்த முன்மொழியப்பட்ட விக்டோரியன் இருப்பிடங்களை அடையாளம் காணுதல், மேலும் தேவைப்பட்டால் பிந்தைய-தயாரிப்பு / VFX வசதிகள்
- SPV க்கான ASIC தற்போதைய கம்பெனியின் சாரம்(ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்தால்)
- திட்டம் முழுவதுமாக நிதியளிக்கப்பட்டிருக்கிறது என்பதை உறுதிப்படுத்தும் நிதித்திட்டம்
    - முதலீட்டாளர்களின் சான்றுகள் மற்றும் அவர்களின் நோக்கம் அல்லது உறுதியான நிதி உதவி
- நிரூபிக்கப்பட்ட தட பதிவுடன், நிறுவப்பட்ட விநியோகஸ்தருடன் முழுமையாக செயல்படுத்தப்பட்ட விநியோக ஒப்பந்தம், அது:
    - திட்டம் இந்தியாவில் குறைந்தது 1,000 திரையரங்குகளில் விநியோகம் செய்யப்படும் என்பதை உறுதி செய்ய வேண்டும்.
    - விண்ணப்பம் சமர்ப்பித்த தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் தேதியிடப்பட்டிருக்க வேண்டும்.
- தகுதியான விக்டோரியன் செலவினத்தில், குறைந்தபட்சம் 700,000 டாலர் விக்டோரியாவில் செலவிடப்படும் என்பதை தயாரிப்பு பட்ஜெட் முறிவு நிரூபணம் செய்ய வேண்டும்.
    - விக்டோரியன் தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஆஸ்திரேலிய திரைத் தொழில் பயிற்சி செய்பவர்கள், குறைந்தபட்ச ஆஸ்திரேலியா தொழில் தரும் சம்பள விகிதங்களை அடிப்படையாகக் கொண்டு வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள் என்று பட்ஜெட் நிருபிக்கப்பட வேண்டும்.
- விக்டோரியாவில் செய்யப்படும் படப்பிடிப்பு தேதிகளைக் காட்டும் தயாரிப்பு திட்ட அட்டவணை
- ஸ்கிரிப்ட் (ஆங்கிலத்தில்)
- தயாரிப்பு நிறுவனம், முக்கிய நடிகர்கள், பணியாளர்கள் துறை தலைவர்கள் குறித்து கிடைக்ககூடிய தகவல்கள்
- உரிமை தொடர் / திட்டத்துக்கு சொந்தம் குறித்த ஆவணங்கள், கீழ்க்கண்டவை உள்பட:

- விண்ணப்பதாரர் இந்த திட்டத்தை தயாரிப்பதற்கான எல்லா உரிமைகளையும் பெற்றிருக்கிறார் என்பதற்கான சான்று (ஸ்கிரிப்டில் உள்ள உரிமை உட்பட).

### *உங்கள் விண்ணப்பத்திற்கு எது உதவும்?*

/ இந்த வழிகாட்டுதல்களை முழுமையாகப் படித்து உங்கள் தகுதியைச் சரிபார்க்கவும். பச்சை நிறத்தில் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்ட சொற்கள் பிலிம் விக்டோரியா இணையதளத்தில் ஒரு சொற்களஞ்சியத்தில் கிடைக்கும்

/ ஆன்லைன் விண்ணப்ப படிவத்தைசரிபார்க்கவும்

/ உங்கள் விண்ணப்பம் ***மதிப்பீடு அளவுகளைக்*** கொண்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவும்

/ ஆன்லைன் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கத் தேவையான அனைத்து ஆவணங்களும் உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளவும்

## உங்கள் ஆன்லைன் விண்ணப்பத்தை ஆரம்பிக்க தயாரா?

*உங்கள் விண்ணப்பத்தை ஆரம்பிக்கவும்*